**அசல்வழக்கு எண். OS. 411 /2021– PW3 .**

**திரு. ராமசந்திரன் த/பெ.முனிசாமி**

**நாள்:15.12.2023**
**குறுக்கு விசாரணை :**

சத்தியமாகச் சொல்கிறேன். நான் தற்போது தேன்கனிகோட்டையில் குடியிருக்கிறேன். எனக்கு வாதி பிரதிவாதிகளை தெரியும். நான் வாதிக்கு உறவினர். முதல் விசாரணையில் எனக்கு வழக்கு விவரங்கள் அனைத்தும் தெரியும் என்று சொல்லி உள்ளேன். ச.எண்.**1338/10** ல் சொத்து விற்பனை செய்யப்பட்டதாக முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் அது நிலமா வீடா என்று சொல்லவில்லை. ச.எண்.**1338/10** என்பது வீடு. ச.எண்.,**1338/10** ஐ யார் யாருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்று முதல் விசாரணையில் நான் சொல்லவில்லை. நிலத்தின் சுவாதினத்தை தங்களிடம் கொடுக்கவேண்டும் என்று வாதிகள் பிரதிவாதிகள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றி எனக்கு தெரியும். புகார் கொடுத்த போது நான் காவல் நிலையம் செல்லவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றி வெங்கடாசலபதி என்னிடம் சொன்னார். முத்துலட்சுமி என்பது என் மனைவி. அவர் ஓய்வு பெற்ற நில அளவையர் அவருக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. முத்துலட்சுமி அரசாங்கத்தில் நிலஅளவையாராக வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளார். யூடிஆர் பட்டா யார் பெயரில் வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. தற்போது பட்டா யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியும். பெத்த வெங்கடராமையா பெயரில் பட்டா உள்ளது- வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றும் வாதிகள் என்னை அழைத்ததால் அவர்ககள் சொன்னபடி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் பழைய பட்டாவை என் மனைவியன் செல்வாக்கை பயன்படுத்தி அவர்கள் பெயரில் பெயர் மாற்றம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது, மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**